**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8075855

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : கடலூர் மாவட்டம் | PS: ஊ.த.க. பிரிவு காவல்நிலையம் | Year: 2022 ஆண்டு | FIR No.: 7/2022 மு.த.அ. எண் | Date: **15.09.2022** நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : 14.09.2022 நாள் முதல் 15.50 hrs | Date to : 14.09.2022 நாள் வரை 23.00 hrs
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.09.2022 | Time நேரம் : 1000 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III | Time நேரம் : 1000 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — **சுமார் 65 கி.மீ. தென்மேற்கு**
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கம் / மகளிர் திட்ட அலுவலகம், விருத்தாசலம், கடலூர் மாவட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : -- மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் கோ.முருகன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு ---- | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் ----
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் ஆய்வுக்குழு ஆய்வாளர் | (g) Address : முகவரி கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) V.சித்ரா, (வயது 50), க/பெ. சீனுவாசன், உதவி திட்ட அலுவலர், மகளிர் திட்டம், கடலூர்.
   2) S.கலைச்செல்வி, (வயது 38), க/பெ செந்தில்குமார், வட்டார இயக்க மேலாளர், தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கம் / மகளிர் திட்ட அலுவலகம், விருத்தாசலம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

இன்று 15.09.2022 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, கோ.முருகன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு, : நாள் : 15.09.2022 அனுப்புநர் கோ.முருகன், ஆய்வுக்குழு ஆய்வாளர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 15/09/2022

Signature of the Officer in-charge Police Station [signature] 15/9/22
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
15-9-22 at 12.00 hrs.

Name: பெயர் S. THIRUVANGADAM.
Rank: நிலை Inspector of Police, V&AC Cuddalore. No. எண் ........

பிரிவு, கடலூர். அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கம் / மகளிர் திட்ட அலுவலகம், விருத்தாசலம், கடலூர் மாவட்டம் – திடீர் ஆய்வு சோதனை – உரிய சரியான முகாந்திரம் இன்றி கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் – திடீர் ஆய்வு மகஜரில் கைப்பற்றுதல் – ஒப்படைப்பு – நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. – கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் (இருப்பு) ஆய்வுக்குழு ஆய்வாளரான கோ.முருகன் ஆகிய நான் எனது அலுவலகத்தில் இருக்கும் போது எனக்கு கிடைத்த தகவலின் படி கடலூர் மாவட்டம், விருத்தாசலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் இயங்கும், தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கம் / மகளிர் திட்ட அலுவலகத்தில் 14.09.2022 ஆம் தேதி சமுதாய சுய உதவிகுழுக்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெற உள்ளதாகவும், அதுசமயம் மேற்படி சமுதாய நல பயற்றுநர்கள் (CRP) வங்கி மூலம் பெறப்பட்ட சம்பளபணத்தில் ஒரு பகுதியை வட்டார இயக்க மேலாளர் மற்றும் உதவி திட்ட அலுவலர் ஆகியோர்களுக்கு லஞ்சமாக கொடுக்க போவதாக ரகசிய தகவல் கிடைத்துள்ளது என்றும், உடனடியாக புறப்பட்டு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு சென்று தகவல் தெரிவித்து நடைவடிக்குமாறு என்னிடம் கூறினார். அதன்படி நான் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மதியம் சுமார் 01.30 மணிக்கு வந்து பணியில் இருந்த காவல் ஆய்வாளர் திரு. சு.திருவேங்கடம் அவர்களிடம் கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கம் / மகளிர் திட்ட அலுவலகத்திற்கு மாலை சுமார் 03.30 மணிக்கு மேல் சென்றால் அங்கு சமுதாய நல பயற்றுநர்கள் ஊதியத்திலுருந்து ஒரு பகுதியை உதவி திட்ட அலுவலர் மற்றும் வட்டார இயக்க மேலாளர் ஆகியோர்களுக்கு லஞ்சமாக கொடுக்க உள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், ஆய்வாளர் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், ஆய்வாளர் திருவேங்கடம் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மதியம் 01.45 மணிக்கு அரசு வாகனத்தில் புறப்பட்டு விருத்தாசலம் சென்றோம். அங்கு கிழக்கு மேற்காக செல்லும் கடலூர் – விருத்தாசலம் சாலையின் வடபுறமாக அமைந்துள்ள விருத்தாசலம் பஞ்சாயத்து யூனியன் அலுவலக வளாகத்தில் இயங்கும் தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கம் / மகளிர் திட்ட அலுவலகத்திற்கு சற்று வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கம் / மகளிர் திட்ட அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மாலை சுமார் 03.50 மணிக்கு கிழக்கு பார்த்து அமைந்து இருக்கும் தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கம் / மகளிர் திட்ட அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். நானும், ஆய்வாளரும் மற்றும் இதர காவல் குழுவினரும் மெயின் ஹாலில் வலதுபுறமாக தெற்கு பார்த்தவாறு இருந்த அறைக்கு

கோ. [signature] 15/9/22

சென்றோம். அங்கு நாற்காலியில் அமர்ந்திருந்த நபர் வட்டார இயக்க மேலாளர் என தெரிந்துகொண்ட பின்னர், என்னையும், ஆய்வாளரையும் மற்றும் ஆய்வு குழுவினரையும் அவரவர் அடையாள அட்டையை காண்பித்து அவரிடம் அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் அவரை பற்றி விசாரித்த போது தனது பெயர் S.கலைச்செல்வி, வயது 38, க/பெ செந்தில்குமார், வட்டார இயக்க மேலாளர் என்றும் தான் தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கம் / மகளிர் திட்ட அலுவலகத்தில் வட்டார இயக்க மேலாளராக பணிபுரிந்து வருவதாகவும், கதவு எண்.1008, புவனகிரி மெயின் ரோடு, பொட்டவெளி, குறிஞ்சிப்பாடி வட்டம், கடலூர் மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை ஆய்வு செய்ய போகும் விவரத்தை வட்டார இயக்க மேலாளர் கலைச்செல்வியிடம் கூறினேன். மேலும், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அவரது முன்னிலையில் சுய சோதனை செய்து காண்பித்து குழுவினரிடம் பொருளோ, பணமோ ஏதுமில்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். மேலும், சோதனையை துவக்குவதற்கு முன்னர், விருத்தாசலம் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ஆ.தண்டபாணி (வயது 49), த/பெ. ஆறுமுகம், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), விருத்தாசலம், வீட்டு முகவரி, நெ.7/பி, திருவள்ளுவர் நகர், 2வது தெரு, பூதாமூர், விருத்தாசலம் மற்றும் திருமதி.S.ராதிகா (வயது 58), க/பெ.குபேந்திரன், விருத்தாசலம் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), விருத்தாசம், வீட்டு முகவரி நெ.59/2, மேற்கு பெருமாள் கோயில் தெரு, திருவதிகை, பண்ருட்டி, கடலூர் மாவட்டம் ஆகிய இருவரையும் சோதனையின்போது உடனிருக்குமாறு அழைத்ததன் பேரில் அலுவலகம் வந்தார்கள். மேலும், அழைப்பின்பேரில் ஆஜரான 1) பெண் தலைமை காவலர் 1890, R.கமலா, (வயது 32), க/பெ.ராஜபாண்டியன், விருத்தாசலம் காவல் நிலையம், வீட்டு முகவரி –கிழக்கு தெரு, சு.கீரனூர், திருமுட்டம் தாலுக்கா, (செல் நெ.9498159944) 2) முதல்நிலை பெண் காவலர் 1401, S.புவனேஸ்வரி, (வயது 30), க/பெ. சதீஷ்குமார், ஆலடி காவல் நிலையம், வீட்டு முகவரி – நடுத்தெரு, தெற்கிருப்பு, இருப்பு அஞ்சல், விருத்தாசலம் தாலுக்கா, கடலூர் மாவட்டம் (செல் 9498155106) ஆகியோர் ஆஜரானார்கள். மேற்படி தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கம் / மகளிர் திட்ட அலுவலகத்தின் பிரதான வாயிற்படி கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் ஹால் சுமார் 40 x 8 அடி நீள அகலமுள்ளது. அதன் வடக்கு புறத்தில் வட்டார இயக்க மேலாளர் அறை சுமார் 15 x 12 அடி நீள அகலம் கொண்டு இருந்தது. மேற்படி அறையில் வட்டார இயக்க மேலாளர் மேஜையில் எதிரோ போடப்பட்ட நாற்காலியில் மற்றொரு நபர் அமர்ந்திருந்தார். அவரை பற்றி விசாரிக்க தனது பெயர் V.சித்ரா (வயது 50), க/பெ. சீனுவாசன், உதவி திட்ட அலுவலர், மகளிர் திட்டம், கடலூர் என்றும், தான் நெ.8/11, பாலகிருஷ்ண நாயுடு தெரு, கள்ளக்குறிச்சி என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும், அதே

அ. [signature]
15/9/22

அறையில் மேலும் 6 நபர்கள் இருந்தார்கள். அவர்களை விசாணை செய்ததில் 1)வே.வாசுகி, (வயது 43), க/பெ. வேலுமணி, கணக்காளர், சமுதாய சுய உதவி குழு, புதுக்கூரப்பேட்டை கிராம பஞ்சாயத்து, வீட்டு முகவரி – நெ.120, பன்னை ரோடு, புதுக்கூரப்பேட்டை, விருத்தாசலம் தாலுக்கா (செல் – 9361711526), 2) ஜா.தமிழரசி (வயது 39), க/பெ, ஜான்பால், கணக்காளர், சமுதாய சுய உதவி குழு, மாத்தூர் கிராம பஞ்சாயத்து, வீட்டு முகவரி – நெ.166, புதுமனை, மாத்தூர் கிராமம், (செல் – 9655993364), 3) ர.கோப்பெருந்தேவி (வயது 36), க/பெ, ரமேஷ், மாவட்ட மகமை கணக்காளர், தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கம் / மகளிர் திட்ட அலுவலகம், விருத்தாசலம், வீட்டு முகவரி – நெ.154, தெற்கு தெரு, சாத்தியம் கிராம், (செல் – 8012786059), 4) வை.லட்சுமி (வயது 48), க/பெ.வைத்தியலிங்கம், கணக்காளர், சமுதாய சுய உதவி குழு, செம்பலக்குறிச்சி கிராம பஞ்சாயத்து, வீட்டு முகவரி – 65, பழைய பால்வாடி தெரு, டி.கோபுராபுரம் அஞ்சல், செம்பலக்குறிச்சி (செல் – 9751854661), 5) கோ.இளவரசி (வயது 40), க/பெ.கோபாலகிருஷ்ணன், கணக்காளர், சமுதாய சுய உதவி குழு, விளாங்காட்டூர், கிராம பஞ்சாயத்து, வீட்டு முகவரி – 72, கிழக்கு தெரு, விளாங்காட்டூர், (செல் 9159905103), 6) கோ.வைரம்மாள் (வயது 39), த/பெ. கோவிந்தசாமி, மகளிர் சுய உதவி குழு செயலாளர், தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கம் / மகளிர் திட்ட அலுவலகம், விருத்தாசலம், வீட்டு முகவரி – 111, மாரியம்மன் கோயில் தெரு, எம்.பரூர் (செல்– 6381583742), மேற்படி அந்த அறையில் இருந்த அனைவரையும் பெண் காவலர்கள் மூலம் தனியறையில் தனித்தனியாக திரேக மற்றும் அவர்களது உடமைகளை சோதனை செய்யப்பட்டது. வட்டார இயக்க மேலாளர் கலைச்செல்வி அவர்களது கைப்பையில் ரூ.82,000/– இருந்தது. அப்பணம் பற்றி அவரிடம் விசாரணை செய்ய அவர் என்னிடம் தனது வட்டாரத்தில் 51 கிராம பஞ்சாயத்துகள் இயங்குவதாகவும், ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திற்கும் இரண்டு சமுதாய சுய உதவி பயிற்றுனர்கள் (CRP) பணிபுரிகிறார்கள் என்றும், அவர்களுக்கு மாத சம்பளம் தலா இரண்டாயிரம் அரசு வழங்குகிறது என்று தெரிவித்தார். மேலும் அவர் என்னிடம் அந்த பணியாளர்களுக்கான அரசால் வழங்கப்படும் மாத ஊதியம் 2019–2020, 2020 – 2021 ஆம் நிதி ஆண்டுகளுக்கான ஊதியம் மொத்தமாக பத்து நாட்களுக்கு முன்னர்தான் அவரவர் வங்கி கணக்கிற்கு தலா ரூ.96,000/– வீதம் செலுத்தப்பட்டது என்றும் தெரிவித்தார். மேலும் அவர் மகளிர் திட்டத்தில் உதவி திட்ட அலுவலரான வி.சித்ரா என்பவர் தன்னை சமுதாய நல பயிற்றுனர்களுக்கு சம்பளமாக செலுத்திய பணத்தில் பாதி பணமான ரூ.48,000/– அவர்களிடமிருந்து பெற்று தருமாறு சொன்னார். மேலும் அவர் பணம் கொடுக்க மறுப்பவர்களை வேலையைவிட்டு நீக்கி விடுவதாக மிரட்டி பணம் பெற்று தரச்சொன்னார். அவரும் பயிற்சி வகுப்பில் கிராம பஞ்சாயத்திற்கான மகளிர் திட்ட கணக்காணர்களிடம் சமுதாய பணி

அ. [signature]
15/9/22

பயிற்றுனர்களிடமிருந்து தலா ரூ.48,000/– பெற்றுவந்து கலைச்செல்வியிடம் கொடுக்குமாறும், கொடுக்க தவறினால் அவர்களை வேலையை விட்டு நீக்கிவிடுவதாக மிரட்டியுள்ளார் எனவும் தெரிவித்தார். அதன்படி 14.09.2022 ஆம் தேதி புதுக்கூரப்பேட்டை, மாத்தூர், செம்பளக்குறிச்சி, விளாங்காட்டூர் மற்றும் சில கிராம பஞ்சாயத்தில் பணிபுரியும் கணக்காளர்கள் பணத்தை கொண்டுவந்து தன்னிடம் கொடுத்ததாகவும், அவற்றை தான் அலுவலக கண்காணிப்பாளர் கோப்பெருந்தேவி மற்றும் செயலாளர் வைரம்மாள் உதவியுடன் பணத்தை பெற்றதாகவும் அவற்றை மொத்தமாக சேர்த்து உதவி திட்ட அலுவலரிடம் கொடுக்கலாம் என வைத்திருந்தபோது தாங்கள் ஆய்வு செய்தீர்கள் என்றும் கூறினார். அவ்வாறு வாங்கிய பணத்தில் ஒரு பகுதிதான் தனது பையில் வைத்திருந்து பணம் ரூ.82,000/– என கூறினார். எனவே மேற்படி தொகை லஞ்சமாக பெறப்பட்டது ஊர்ஜிதமானதால், அப்பணத்தை நான் மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும், உதவி திட்ட அலுவலர் சித்ரா அவர்களது கைப்பையில் ரூ.3,750/– இருந்தது. அப்பணம் பற்றி அவரிடம் விசாரணை செய்ய அவர் சரியான முகாந்திரம் கூறியதால், அப்பணம் அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. கணக்கர் வாசுகி கைப்பையில் பணம் எதுவும் இல்லை. கணக்கர் தமிழரசி கைப்பையில் ரூ.4,000/– இருந்தது. அப்பணம் பற்றி அவரிடம் விசாரணை செய்ய அவர் சரியான முகாந்திரம் கூறியதால், அப்பணம் அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. கணக்கர் லட்சுமி கைப்பையில் ரூ.24,000/– இருந்தது. அப்பணம் பற்றி அவரிடம் விசாணை செய்ய செம்பலங்குறிச்சி ஊராட்சியில் சமுதாய நல பயிற்றுநராக பணிபுரிந்த இரண்டு ஊழியர்களுக்கு தலா ரூ.48,000/– வந்தது எனவும், அதில் அவர்களிடமிருந்து தான் உதவி திட்ட அலுவலர் சித்ரா சொன்னதன் பேரில் வட்டார இயக்குநர் கலைச்செல்வியிடம் முதல் தவணையாக கொடுப்பதற்காக பெற்றுவந்த பணம் என்றும் தெரிவித்தார். மேற்படி பணம் லஞ்சப்பணம் என ஊர்ஜிதமானதால், அப்பணத்தை நான் மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன். கணக்கர் இளவரசி கைப்பையில் ரூ.76,000/– இருந்தது. அப்பணம் பற்றி அவரிடம் விசாரணை செய்ய விளாங்காட்டூர் ஊராட்சியில் சமுதாய நல பயிற்றுநராக பணிபுரிந்த இரண்டு ஊழியர்களுக்கு தலா ரூ.48,000/– வந்தது எனவும், அதில் அவர்களிடமிருந்து தான் உதவி திட்ட அலுவலர் சித்ரா சொன்னதன் பேரில் வட்டார இயக்குநர் கலைச்செல்வியிடம் கொடுப்பதற்காக பெற்றுவந்த பணம் என்றும் தெரிவித்தார். மேலும், அவர் கலைச்செல்வியிடம் பணம் ரூ.48,000/– கொண்டு தான் கொண்டுவந்த தகவலை தெரிவித்தேன். அதற்கு அவர் தன்னையை அப்பணத்தை வைத்துக்கொள்ளுமாறும், மேலும் ஒரு கட்டு பணத்தை என்னிடம் கொடுத்து அப்பணத்துடன் சேர்த்து வைத்துக்கொள்ளுமாறு கூறினார். அதனால் நான் அப்பணத்தை எனது கைப்பையில் வைத்திருந்தேன். மேற்படி பணம் லஞ்சப்பணம் என ஊர்ஜிதமானதால், அப்பணத்தை நான் மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன். மகளிர் சுய உதவிகுழு வட்டார அளவிலான கூட்டமைப்பு செயலாளர்

அ. [signature] 15/9/22

வைரம்மாள் கைப்பையில் ரூ.1,34,000/– இருந்தது. அப்பணம் பற்றி அவரிடம் விசாரணை செய்ய வட்டார மேலாளர் கலைச்செல்வி தன்னிடம் கொடுத்து வைக்கச்சொன்னதன் பேரில் தனது கையில் வைத்திருந்ததாக கூறினார். மேற்படி பணம் லஞ்சப்பணம் என ஊர்ஜிதமானதால், அப்பணத்தை நான் மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன். இச்சோதனையில் மொத்தம் ரூ.3,16,000/– லஞ்சப்பணம் என கருதி கைப்பற்றப்பட்டது. மேலும், விசாரணைக்காக அலுவலத்தில் பராமரிக்கப்படும், பணியாளர்களின் வருகை பதிவேடு (பக்கம் 1 முதல் 32 வரை) கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனையின் போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் மற்றும் அவர்களது குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை, எந்தெந்த ஆவணங்கள்/பொருட்கள் எவ்வாறு எங்கிருந்து எடுக்கப்பட்டதோ, அதே இடத்தில் மீண்டும் வைக்கப்பட்டது. மேலும் எங்களது மேற்படி ஆய்வின் போது அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை. மேலும் இச்சோதனையானது அரசு வகுத்துள்ள கொரானா தடுப்பு நடவடிக்கை வழிமுறைகளை முறையாக பின்பற்றி நடத்தப்பட்டது. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் மாலை 03.50 மணிக்கு துவங்கி இரவு 11.00 மணிக்கு முடிக்கப்பட்டது. உத்திரவுப்படி இன்று 15.09.2022 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து, 14.09.2022 ஆம் தேதி தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கம் / மகளிர் திட்ட விருத்தாசலம் அலுவலகத்தில், மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமாக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டி, திடீர் ஆய்வின்போது தயார் செய்யப்பட்ட அசல் திடீர் ஆய்வு மகஜர், ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,16,000/– மற்றும் 1) வே.வாசுகி, (வயது 43), க/பெ. வேலுமணி, கணக்காளர், சமுதாய சுய உதவி குழு, புதுக்கூரப்பேட்டை கிராம பஞ்சாயத்து, 2) ஜா.தமிழரசி (வயது 39), க/பெ, ஜான்பால், கணக்காளர், சமுதாய சுய உதவி குழு, மாத்தூர் கிராம பஞ்சாயத்து, 3) வை.லட்சுமி (வயது 48), க/பெ.வைத்தியலிங்கம், கணக்காளர், சமுதாய சுய உதவி குழு, செம்பலக்குறிச்சி கிராம பஞ்சாயத்து, 4) கோ.இளவரசி (வயது 40), க/பெ.கோபாலகிருஷ்ணன், கணக்காளர், சமுதாய சுய உதவி குழு, விளாங்காட்டூர், கிராம பஞ்சாயத்து, 5) கோ.வைரம்மாள் (வயது 39), த/பெ. கோவிந்தசாமி, மகளிர் சுய உதவி குழு செயலாளர், தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கம் / மகளிர் திட்ட அலுவலகம், விருத்தாசலம் ஆகியோர்களது வாக்குமூலங்கள் மற்றும் திடீர் ஆய்வு மகஜரில் குறிப்பிட்டுள்ள கைப்பற்றப்பட்ட ஆவணங்களை இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்படுகிறது. மேலும் இது சம்மந்தமாக பதிவு செய்யும் வழக்கின் விவரம் பின்னர் தெரியப்படுத்துமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள (ஒப்பம்............) (கோ. முருகன்), ஆய்வுக்குழு ஆய்வாளர். அய்யா,

அ. [signature]
15/9/22

**நான் இன்று** 15.09.2022 காலை 10.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனுவை பெற்று **கடலூர் ஊழல்** தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/2022, சட்டப்பிரிவு 7 **ஊழல்** தடுப்பு சட்டம் 1988, ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018ன் படி **வழக்கு** பதிவு செய்யப்பட்டது. இதன் அசலை, வாதியின் புகார் மனுவுடன் இணைத்து, **கணம்** தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் அவர்களுக்கும், **இதர** நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அ. [signature]
15/9/22
[S. THIRUVANGADAM]
Inspector of Police,
V&AC, Cuddalore.